பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
22 07 2025 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர், உடல்நலம் கருதி தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.
- ஆபரேஷன் சிந்தூர் குறித்து மக்களவையில் 16 மணி நேரம் விவாதம் நடத்துவதற்கு நாடாளுமன்ற அலுவல் ஆய்வுக்குழு முடிவு செய்துள்ளது.
- சென்னை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினின் உடல்நலம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி தொலைபேசியில் கேட்டறிந்தார்.
- தமிழகத்தில் ஒருசில இடங்களில் இன்,று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- இந்த ஆண்டு உலகக்கோப்பை செஸ் போட்டிகளை இந்தியா நடத்தவுள்ளதாக சர்வதேச செஸ் சம்மேளனம் அறிவித்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் தமது உடல்நலம் காரணமாக பதவி விலகி உள்ளார்.

இதுதொடர்பாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் உடல்நலத்தில் கவனம் செலுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கவும், மருத்துவர்களின் ஆலோசனை ஏற்றும் உடனடியாக தாம் ராஜினாமா செய்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

தமது பதவி காலத்தில் குடியரசுத்தலைவர் அளித்த ஆதரவுக்கும், பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் அமைச்சர்களுக்கும் தமது நன்றியை தெரிவித்துக்கொள்வதாக திரு. ஜக்தீப் தங்கர் அதில் கூறியுள்ளார்.

தாம் பதவி வகித்த காலத்தில் பிரதமரின் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவு அளவிட முடியாதது என்றும், நிறைய விஷயங்களை கற்றுக்கொண்டதாகவும் அதில் அவர் தெரிவித்துள்ளார்.

தவிர நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரின் அன்பு, நம்பிக்கையை தாம் பெற்றிருந்ததாகவும், இது என்றென்றும் தமக்கு நினைவில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மிகப்பெரிய குடியரசு நாட்டில் துணைத்தலைவர் பதவியை வகித்ததன் மூலம் ஏராளமான அனுபவங்களைப் பெற்றதற்காக தமது நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவும், நாட்டின் குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றத்தில் பங்கு வகித்ததற்காக திருப்தியடைவதாகவும் திரு. ஜக்தீப் தங்கர் அதில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சென்னையில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினின் உடல் நலம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி தொலைபேசி மூலம் கேட்டறிந்தார்.

மேலும் மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தி, நடிகர்கள் திரு. ரஜினிகாந்த், திரு. கமல்ஹாசன் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் திரு. ஸ்டாலினை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடல்நலம் குறித்து விசாரித்ததாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் விரைவில் குணமடைய தாம் வாழ்த்துவதாக எதிர்க்கட்சித்தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதனிடையே முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மருத்துவர்களின் அறிவுரைப்படி 3 நாட்கள் ஓய்வில் இருப்பார் என்றும், அங்கிருந்தபடியே அரசு அலுவல்களை மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் குறித்து மக்களவையில் விவாதம் நடத்த நாடாளுமன்ற அலுவல் ஆய்வுக்குழு முடிவு செய்துள்ளது.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை தொடர்பாக மக்களவையில் 16 மணி நேரம் விவாதம் நடத்துவதற்கு நேற்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக்கு குழுவில் முடிவெடுக்கப்பட்டது.

இதேபோல் வருமான வரி மசோதா குறித்து மக்களவையில் 12 மணி நேரமும், மாநிலங்களவையில் 9 மணி நேரமும் விவாதம் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டள்ளது.

<<<<>>>>

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்று நேரிட்ட விமான விபத்தில் 20 பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு விமானப் படையின் பயிற்சி விமானம் விபத்துக்குள்ளானதில் விமானி உட்பட 20 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இந்த விபத்துக்கு இரங்கல் தெரிவித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் இளம் மாணவர்கள் பலர் இந்த விபத்தில் உயிரிழந்திருப்பது அதிர்ச்சியையும், வருத்தத்தையும் அளிப்பதாக கூறியுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ள பிரதமர், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த தருணத்தில் பங்களாதேஷுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்க இந்தியா தயாராக உள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

100 நாள் வேலை திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை தமிழக அரசு தவறாக பயன்படுத்தியதாக எதிர்க்கட்சித்தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் நேற்று பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கவில்லை என கூறுவது தவறான தகவல் என்று கூறினார்.

இத்திட்டத்தில் தவறுகளைக் களைந்து அதிக நிதியைப் பெற திமுக அரசு தவறிவிட்டதாக திரு. எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.

<<<<>>>>

நடப்புக் கல்வியாண்டிற்கான மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க விரும்புவோர் ஆகஸ்ட் மாதத்தில் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 16ஆம் தேதிக்குள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து விண்ணப்பிக்குமாறு எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வரும் வெள்ளிக்கிழமை தனியார் துறை சார்பில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது.

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் அன்று காலை 10 மணி முதல் பிற்பகல் வரை நடைபெற உள்ள இந்த முகாமில் முன்னணி தனியார் நிறுவனங்கள் கலந்துகொண்டு பணியாளர்களை தேர்வு செய்ய உள்ளனர்.

8ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, பொறியியல் உள்ளிட்ட படிப்புகளை முடித்தவர்கள் இந்த முகாமில் பங்கேற்று பயனடையலாம் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களின் மலைப் பகுதிகளின் ஒருசில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் நேற்றிரவு பெய்த கனமழையால் வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சேது – ஹா விழுப்புரம் - 16

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

மேற்குவங்க மாநிலம் முர்ஷிதாபாதில் சட்டவிரோதமாக ஊடுருவிய பங்களாதேஷை சேர்ந்த 8 பேரை அம்மாநில காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

பீஹாரில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கையில் 90 சதவீத வாக்காளர்களின் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாக உச்சநீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மும்பையில் 2006ஆம் ஆண்டு நிகழ்ந்த ரயில் குண்டுவெடிப்பில் குற்றம்சாட்டப்பட்ட 12 பேரையும் விடுவித்து உயர்நீதிமன்றம் வெள்யிட்ட தீர்ப்பை எதிர்த்து மகாராஷ்டிர மாநில அரசு மேல்முறை செய்ய முடிவு செய்துள்ளது.

<<<<>>>>

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே பனங்காட்டங்குடி பகுதியில் கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த 2 பேரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து தலா 3 லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டத்தில் 40 மாணவ-மாணவிகளுக்கு உயர்கல்வியில் சேர்வதற்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி வழங்கினார்.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சிவசௌந்தவல்லி அறிவுறுத்தினார்.

<<<<>>>>

ஆடி அமாவாசையை முன்னிட்டு, சென்னை, சேலம் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இருந்து ராமேஸ்வரத்திற்கு நாளை சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ள அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பராமரிப்பு பணிகள் காரணமாக திருச்சி – ராமேஸ்வரம் விரைவு ரயில் வரும் 28ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை மானாமதுரை மட்டுமே இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

பயணிகளின் வசதிக்காக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தேசிய பொதுப் போக்குவரத்து அட்டைக்கு முழுமையாக மாற திட்டமிட்டுள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்த ஆண்டு உலகக்கோப்பை செஸ் போட்டிகளை இந்தியா நடத்தவுள்ளது.

இப்போட்டிகள் வரும் அக்டோபர் 30ஆம் தேதி முதல் நவம்பர் 27ஆம் தேதி வரை நடைபெற உள்ளன.

எனினும் இப்போட்டிகள் எந்த நகரில் நடைபெறும் என்பது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று சர்வதேச செஸ் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்தப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பிடிக்கும் வீரர்கள் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் பங்கேற்க தகுதி பெறுவார்கள்.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான அடுத்த 2 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலும் இந்தியாவின் ஆல்ரவுண்டர் நிதிஷ்குமார் ரெட்டி காயம் காரணமாக விளையாட மாட்டார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

இதேபோல் கைவிரல் காயம் காரணமாக நாளை தொடங்கும் 4வது டெஸ்ட் போட்டியில் வேகப்பந்து வீச்சாளர் அர்ஷ்தீப் சிங் பங்கேற்கமாட்டார் என்றும் பி.சி.சி.ஐ தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ள இந்திய அணி, ஏற்கனவே முடிவடைந்த 3 போட்டிகளில் ஒன்றில் வெற்றி பெற்றுள்ளது.

<<<<>>>>

தெற்காசிய கால்பந்து சம்மேளனத்தின் சார்பில் 17 வயதுக்குட்பட்டோருக்கான சாம்பியன் போட்டிகள் வரும் செப்டம்பர் 15ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை கொழும்புவில் நடைபெற உள்ளன.

இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டியில் இந்திய அணி 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இதே பிரிவில் பாகிஸ்தான், பூடான், மாலத்தீவு அணிகளும் இடம்பெற்றுள்ளன.

இலங்கை, பங்களாதேஷ், நேபாள் அணிகள் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ளன.

<<<<>>>>